
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 28 இதழ் - 11 நவம்பர் 2015






# கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்





## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. ஏன் நாங்கள் மனசாட்சி ... 11
3. பெண்கள் பகுதி 17
4. வாலிபர் பகுதி 22
5. சிறுவர் பகுதி 25
6. ஏன் சபை கூடுகிறோம் ? 27
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை 32


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- **இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.**
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 28 **November - 2015** Issue - 11


ஆசிரியர் உரை

## வழக்காடுவோம் வாருங்கள்

பழைய ஏற்பாட்டிலுள்ள அனைத்து புத்தகங்களிலும் விசேஷமானதென்றும், வித்தியாசமானதென்றும் சொல்லப்படும் தகுதி ஏசாயா தீர்க்கதரிசன நூலுக்கு உண்டு. இச்சிறப்பு நிலைக்குப் பல ஆதாரங்களை நாம் அடுக்க முடியும். இதை சிலர் "குட்டி வேதாகமம்" என்று அழைப்பர். இப்படிச் சொல்வதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒட்டுமொத்த வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளது போலவே இதிலும் 66 அதிகாரங்கள் இருக்கிறது. முழு வேதாகமம் எப்படி அதன் செய்தியினடிப்படையில் 39 நூல்கள், 27 நூல்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கிறதோ அது போலவே இந்நூலையும் செய்தியினடிப்படையில் 39 அதிகாரங்கள் 27 அதிகாரங்கள் என்று பிரிக்க முடியும்.

ஒன்றிரண்டு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைத் தவிர மற்ற அனைவராலும் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன நூல் இது தான். எஞ்சியிருக்கிற அனைத்து தீர்க்கதரிசன நூல்களின் மேற்கோள்களை ஒன்று சேர்த்தால் கூட இந்த ஒரு புத்தகத்தின் அளவுக்கு வருவதில்லை.

சிறப்பான இச்சிறப்புகளையெல்லாம் ஓரம் கட்டும் வேறொரு சிறப்பும் இந்தப் பழைய ஏற்பாட்டு நூலுக்கு உண்டு. கிறிஸ்துவின் முதலாவது வருகை பற்றியும், சபையாகிய இராஜ்யம் ஸ்தாபிக்

கப்படும் என்பது பற்றியும் இதில் நேர்த்தியாக விவரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவைப் பற்றி இதன் ஆசிரியர் பேசுவதைக் கவனித்தால், இவர் ஒரு புதிய ஏற்பாட்டு எழுத்தாளரோ என்று கூட எண்ணத் தோன்றும். இவர் கிறிஸ்துவைக் கண்ட விதத்தை, பின்னாளில் அப்போஸ்தலன் யோவான் இவ்விதம் கூறுகிறார். "ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிற போது இவைகளைச் சொன்னான்" என்று. (யோவா. 12:41). அதாவது, கிறிஸ்துவின் பிறப்புக்குப் பிறகு வாழ்ந்த, வாழ்கின்ற எண்ணிலடங்காதோர் அவருடைய மகிமையைக் காண முடியாமல் தடுமாறும்போது, அவருடைய பிறப்புக்குப் பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா கண்டு கொண்டதாகக் கூறுகிறார்.

இத்தீர்க்கதரிசன நூலின் ஆசிரியரான ஏசாயா மெத்தப்படித்தவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், மற்ற தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கும் இவருடைய எழுத்துக்கும் குறிப்பி டத்தக்க வேறுபாடு உண்டு. சொல்நயமும், கருத்துச்செறிவும் இதில் ஒருங்கே அமைந்திருப்பதை நாம் காண முடியும். வேத விற்பன்னர்கள் இவ்ரை "பழைய ஏற்பாட்டின் பவுல்" என்றும் சொல்வதுண்டு.

இந்த ஏசாயா தெற்கு இராஜ்ஜியமாகிய யூதாவிலே தீர்க்கதரிசனம் உரைத்த ஒரு மகா தீர்க்கன். இச்சீரிய பணியை சுமார் 60 ஆண்டுகள் செவ்வனே செய்தார். இவருடைய நாட்களில் இராஜாக்களாக உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோர் இருந்தனர். இவருக்குப் பின் வந்த எரேமியா தனது பணியில் தோற்றுப் போகும் போது, இவர் அசீரியரிடமிருந்து எருசலேமைக் காப்பாற்றும் பணியில் வெற்றி கண்டார்.

இவருடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஜனங்களுடைய ஆன்மீக நிலை படுமோசமாக இருந்ததென்று சொல்வதை விட, மிகக் கேவலமாக இருந்ததென்று சொல்வதே நியாயம். இவர்களைப் பற்றிய மனக் குமுறலை தேவன் ஏசாயாவைக் கொண்டு கொட்டினார். முதலாவது, இவர்கள் தேவனுக்கு விரோதமான கலகமுள்ள ஜனமென்று பெயரிடப்பட்டுள்ளனர். (வ.2) அடுத்து, அறிவும், உணர்வும் அற்ற நன்றி கெட்ட ஜென்மங்கள் என்று இடித்துரைக்கப்பட்டுள்ளனர். (வ.4). பிறகு, பாவமும், அக்கிரமமும், பொல்லாப்பும், கேடும் நிறைந்த ஜனங்கள் என்று சாடப்பட்டுள்ளனர் (வ.4). இன்னும் ஆன்மீக ரீதி யில் வியாதிப்பட்டு, மரண அவஸ்தையுடன், முற்றிலும் நாற்றமெடுத்த நிலையில் உள்ளதாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள் (வ.5,6).

ஒன்றாம் அதிகாரத்தைத் தொடர்ந்து நாம் வாசித்தால், ஜனங்களின் அடாவடித்தனமான கீழ்ப்படியாமையைப் பொறுக்க முடியாத தேவன் ஒரு கட்டத்தில், "போதும், இனி நிறுத்துங்கள்" என்று கடுமையாக எச்சரிக்க வேண்டியதாயிற்று. பலிகள் என்னத்துக்கு நிறுத்து; கொழுத்த மிருகங்களின் நிணம் தேவையில்லை, நிறுத்து; ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தில் பிரியமில்லை, நிறுத்து; காணிக்கை வேண்டாம், நிறுத்து; தூபங்காட்டுதல் அருவருப்பாயிருக்கிறது, நிறுத்து; உன் மாதப்பிறப்பும், ஓய்வுநாளும், சபைக்கூட்டமும் அக்கிரமமாயிருக்கிறது, இனி சகிக்கமாட்டேன். ஆகவே, நிறுத்து; பண்டிகைகளைச் சுமந்து இளைத்துப்போனேன், நிறுத்து என்று வரிசை யாகச் சொல்லி வந்தவர், இறுதியாக, அவர்களைப் பற்றிய தன்னுடைய அதிருப்தியின் உச்சகட்டமாக, உன் ஜெபத்தையும் நிறுத்து என்று சொல்லிவிட்டார். (11-15).

இப்படிப்பட்ட ஒரு அவலச் சூழ்நிலையில் தான், பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்ட ஏசாயா தீர்க்கன், தன்னுடைய வசனத்தின் மூல மாக நம்பிக்கையின் வாசலைத் திறந்து காட்டுகிறார். இப்பொழுதும் ஒன்றும் முழுகிப்போகவில்லை, மனந்திரும்புங்கள் என்று அவர்களை ஊக்குவிக்கிறார், நன்மையைப் பெற்றுக்கொள்ள வாருங்கள் என்று அழைக்கிறார். இதோ, அந்த வசனம் "வழக்காடுவோம் வாருங்கள்" என்று கர்த்தர் சொல்கிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம் பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்" (ஏசாயா 1:18).

அற்புதமான இந்த வசனத்தின் முதல் இரண்டு வார்த்தைகள் தான் நமது ஆராய்ச்சிக்கான பகுதி. ஆம், **வழக்காடுவோம் வாருங்கள்** என்பது.

முதலாவது, "வழக்காடுவோம்" என்பது பற்றிப்பார்ப்போம். வழக்கு என்பது நமக்குப் பரிச்சயமான ஒரு வார்த்தை தான். தரத்திற்கும், தகுதிக்கும் ஏற்ற வழக்குகளை நாம் நமது வாழ்க்கையில் சந்தித்துக் கொண்டு தான் உள்ளோம். நீதிமன்றத்திற்கு சென்று வாதாடி னால் தான் அது வழக்காகும் என்பதல்ல. இருவருக்கும் இடையே ஒரு பிரச்சனை இருந்தால் கூட அதுவும் ஒரு வழக்கு தான். இந்த அடிப் படையில் தான் நாம் ஏசாயாவின் வார்த்தைகளை அணுக வேண்டும்.

சரி, இங்கே நடந்த வழக்கு ஜனங்களுக்கும், கர்த்தருக்கும் இடையே நடந்த ஒன்று. எது சரி என்று தீர்மானிப்பது தான் வழக்காடு தலின் நோக்கமாகும். அதாவது, விவாதித்து, ஒரு முடிவுக்கு வந்து,

நீதியை நிலைநாட்டுவது. இக்கருத்தின்படி, தேவன் சரியா அல்லது மனிதன் சரியா என்று வாதிட்டுப் பிறகு ஒரு முடிவுக்கு வர வேண்டு மென்பது இந்த வசனத்தின் நோக்கமல்ல. ஏனெனில், தேவன் எப்பொழுதுமே நீதிபரரே. அவர் எந்தச் சூழ்நிலையிலும் தனது பரிசுத்தம் மற்றும் நீதியிலிருந்து ஒருபோதும் மாறுவதில்லை. அப்படி யானால் இதன் பொருள் என்ன? நீதியின் பாதையில் நடவாமல், தடம் புரண்டு நியாயத்தைக் காலின் கீழே போட்டு மிதித்துக் கொண்டி ருக்கும் ஜனங்களுக்கு நியாயத்தைக் கற்றுக் கொடுக்கும் வழக்காகவே, இவ்வழக்கு இடம் பெற்றுள்ளது. அதாவது, நீதியைத் தெரிந்து கொள்ள நீதியுள்ள தேவன் சொல்வதைக் கேளுங்கள் என்பதே இவ்வழக்கின் ஒரே நோக்கம்.

தேவனுடைய வார்த்தைகளை புறக்கணித்ததே பிரச்சினைக ளுக்குக் காரணம். ஆகவே, தேவன் நமக்குச் சொல்வதைக் கேளுங்கள், அதினால் நன்மை உண்டு என்று இவ்வழக்கின் மூலம் உணர்த்தப்படு கிறார்கள். ஏனெனில், தேவனுடைய வார்த்தைகள் புரிந்து கொள்ளக் கூடியதாகவே உள்ளது. இந்த வழக்குக்கு வாருங்கள், வந்து தேவன் சொல்வதைக் கேளுங்கள். அப்பொழுது உங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று கூறுகிறார். அப்போஸ்தலன் யோவானும் புதிய ஏற்பாட்டில் இக்கூற்றை ஆமோதிக்கிறார். "சத்தியத்தையும் அறிவீர் கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று (யோவா. 8:32).

அடுத்த வார்த்தை, "வாருங்கள்" என்னும் அழைப்பு. அதாவது நீதியையும், நியாயத்தையும் அறியும் அறிவைப் பெற்றுக்கொள்ள வாருங்கள் என்பது. ஆங்கில வேதாகமம், 'இப்பொழுதே வாருங்கள்" என்ற பொருளில் கூறுகிறது. அதாவது, அழைப்பு மிக அவசரமாக உள்ளது. அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தாமதிக்கத் தாமதிக்க ஆபத்து அதிகம் என்பதே இந்த அவசர அழைப்பின் பொருள். தேவனை அறியும் அறிவு - வேத வசனத்தைப் பற்றிய அறிவு் இல்லாவிட்டால் ஆபத்து அதிகம் என்பதில் சந்தேகமில்லை. ஞானி சாலமோன் தேவ ஏவுதலினால் இதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியுள்ளார். 'தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" (நீதி. 29:18) என்று.

ஏசாயாவின் நாட்களில் ஜனங்களை எதிர்நோக்கியிருந்த ஆபத்து பெரும்பாலும் சரீர அழிவு சம்பந்தப்பட்டது. அதற்கே அவர்கள் செயல்படும்படி அவசரப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், இப்பொழுது நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்து ஆன்ம அழிவு

சம்பந்தப்பட்டதென்பதைக் கவனியுங்கள். நித்திய நரகத்திலே நம்மைத் தள்ளுமளவிற்கு ஆபத்துடையது. ஆகவே, நாம் அதைவிட அவசரமாக செயல்பட வேண்டிய அவசியமுள்ளது.

இன்றைய மத உலகத்தை நாம் உற்று நோக்கினால், ஆன்மீகச் சீரழிவில் திரும்பி வர முடியாத எல்லையை அது தொட்டு விட்டதோ என்று ஐயப்படுமளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. கள்ளத் தீர்க்கதரிசனங்களிலும், கள்ள உபதேசங்களிலும் ஜனங்கள் வெகுவாகப் பிரியப்படுகிற நிலையை நாம் கவனிக்கும் போது, ஏதோ நாம் எரேமியா தீர்க்கனுடைய நாட்களில் இருக்கிறோமோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. அந்நாட்களில் ஜனங்கள் மார்க்க மோசடியில் திளைத்து சுகித்திருந்ததைக் கண்ணுற்ற தேவன், **திகைத்துத் திடுக்கிட்டதாக** வேதம் கூறுகிறது. 'திகைத்து திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள். இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது. ஆனாலும், முடிவிலே என்ன செய்வீர்கள்? (எரே. 5:30,31).

**"முடிவிலே என்ன செய்வீர்கள்?"** என்ற கேள்வி இந்நாட்களில் வாழும் நமக்கு மிகப் பொருத்தமாக உள்ளது. மத மோசடிக் கும்பல்களிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் முயற்சியை நாம் மிக அவசரமாக செயல்படுத்தாவிட்டால், முடிவிலே நாம் என்ன செய்யப் போகிறோம்? சொல்லுங்கள்.

இங்கே, தேவனுடைய கேள்வியை நன்றாகக் கவனியுங்கள். 'முடிவிலே என்ன செய்வீர்கள்?" அநேகராகிய நாம், ஆன்மீக வாழ்வில் நம்முடைய காரியங்கள் சரியா, தவறா என்று தீர்மானிப்பதற்கு நமது இன்றைய வாழ்க்கை நிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்கிறோம். அதாவது, இவ்வுலகில் நமக்கிருக்கும் வீடு, வாசல், சொத்து, சுகம், பட்டம், பதவி, அந்தஸ்து போன்றவற்றை கணக்கிட்டு ஆன்மீகத்தில் நான் செய்வதெல்லாம் சரியாக இருக்கிறபடியால் தான் இவைகளெல்லாம் ஆசீர்வாதமாக எனக்கு கிடைக்கிறது. ஆகவே, நான் செய்வதைத் தொடர்ந்து செய்யலாம், எதைப் பற்றியும் சிந்திக்கத் தேவையில்லை; வேறு எதற்கும் கீழ்ப்படியத் தேவையில்லை, எதையும் மறுபரிசீலனை செய்யத் தேவையில்லையென்று எண்ணுகிறோம். **ஏசாயா மற்றும் எரேமியா தீர்க்கன்களின் நாட்களிலும் இதே எண்ண ஓட்டம்தான் இருந்தது.** ஆனால், தேவனுடைய கேள்வியை நன்றாகக் கவனியுங்கள். **"முடிவிலே, என்ன செய்யப்போகிறீர்கள்?"** நமக்கு

முடிவு என்பது நியாயத்தீர்ப்பின் நாள். அந்த நியாயத் தீர்ப்பின்நாளில் என்ன செய்யப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

அப்போஸ்தலன் பவுல் அத்தேனருக்குப் பிரசங்கிக்கும் பொழுது இந்த நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து எச்சரித்துள்ள தையும் கவனியுங்கள். **மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்.** (அப். 17:31). அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே நாம் தப்பித்துக் கொள்ளும்படியாக நாம் தேவனுடைய வார்த் தைகளோடு வழக்காட வேண்டும். அவருடைய வார்த்தைகளுக்கு மாத்திரமே நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனெனில், நம்மை நியாயந்தீர்க்கப்போவது தேவ வார்த்தைகளே. இயேசு ஆண்டவர் இது பற்றி தெளிவாகச் சொல்லிவிட்டார். **என்னைத் தள்ளி என் வார்த் தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றி ருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.** (யோவா. 12:48) தேவனுடைய வார்த்தைகளோடு நாம் ஏன் வழக்காட வேண்டுமென்பது இப்பொழுதாவது புரிகிறதா?.

அன்பரே! தேவனுடைய வார்த்தைகளோடு வழக்காடி, நியாயத் தைக் கற்றுக் கொள்ள, நீதியைப் பிடித்துக் கொள்ள, உண்மையான சத்தியத்தை அறிந்து கொள்ள, உண்மையான சபையை அடையாளம் கண்டு கொள்ள. இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள பிடிவாதமாக மறுக்கும் நாம், முடிவிலே என்ன செய்யப்போகிறோம்? ஏதாவது அதிரடித் திட்டம் கைவசம் உண்டா? மாற்று வழி ஏதாகிலும் கிடைக்கு மென நம்புகிறீர்களா? அப்படி எதுவும் இல்லையென்றால் தேவனு டைய வார்த்தையைத் தொடர்ந்து காலின் கீழ்போட்டு மிதிக்கும் நம்மு டைய துணிகரமான நிலைக்கு என்ன தான் காரணம் சொல்லுங்களேன்.

அருமையானவர்களே, அந்நாளில் யாரும் நமக்கு சிபாரிசு பண்ண முடியாது. நமது பக்திக்குப் பாத்திரமாயிருக்கிற பிரபல பிரசங்கிகளோ, நம்முடைய அபிமானிகளாக உலா வரும் அற்புத ஊழியர்களோ, நம்மால் ஆன்மீகத் தூதர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பேராயர்களோ, மனதை மயக்கும் பாடல்களை பாடும் பாதிரிகளோ, இன்னும் இறைவனுக்கு இணையாக மதிக்கப்பெறும், போப்பாண்டவர்களோ நமக்கு சிபாரிசு பண்ண முடியாது. முடியவே முடியாது. ஆன்மீகத்தை உண்மையாக நாடும்

மக்கள் இவர்களின் விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். இப்படிப்பட்டவர்களைக் குறித்து தீமோத்தேயு சொல்வதைக் கவனியுங்கள். **தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள்.** (1தீமோத். 1:7) என்று.

இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்துப் பேதுரு அப்போஸ்தலன் இன்னும் ஒருபடி மேலே சென்று கடுமையாக குறிப்பிடுவதைப் பாருங்கள். **தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், மற்றவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்...** என்று (2பேது. 2:19).

எனக்கு அருமையான வாசகரே! உங்கள் விசுவாசத்தை எதன் மீது கட்டியிருக்கிறீர்கள்? பெரும்பான்மையை ஆதாரமாக வைத்தா அல்லது வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டா? நீங்கள் பாவ மன்னிப்பு பெற்றது உணர்வுகளினடிப்படையிலா அல்லது வேத வசனங்களின் சட்டப்படியா? நீங்கள் சார்ந்திருப்பது மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவினை சபையா அல்லது வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சபையா? உங்கள் ஆராதனை முறை மனிதனால் வகுக்கப்பட்ட கொள்கைப் புத்தகத்தின்படியானதா அல்லது வசன மாதிரியின்படி ஆவியும், உண்மையும் உடையதா? இன்னும் நீங்கள் பாட்டு பாடுவதும், கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதும், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதும் எந்த அடிப்படையில் நடக்கிறது? ஒவ்வொன்றுக்கும் வசன ஆதாரம் இருக்கிறதா என்று கவனிக்கிறீர்களா?.

இதெல்லாம் அவ்வளவு முக்கியமில்லையென்று நீங்கள் சொன்னாலோ அல்லது இதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை யென்று நீங்கள் கருதினாலோ, **முடிவிலே என்ன செய்யப்போகிறீர்கள்**? சிந்தியுங்கள், சிந்தியுங்கள். சிந்திப்பதற்கான வாய்ப்பு நம்முடைய மரணம் வரைதான் அல்லது இயேசுக் கிறிஸ்து வரும் வரையில் தான், பிறகு ஒன்றுமே செய்யமுடியாது. லாசரு, ஐசுவரியவான் உவமையை இயேசு இந்த உண்மையை விளக்கும்படியாகவே சொன்னார். ஆகவே, மிகுந்த எச்சரிக்கையோடு ஆன்மீக வாழ்வில் அடியெடுத்து வைக்க வேண்டும்.

நண்பரே! வழக்காடுவோம் வாருங்கள் என்ற தலைப்பை நான் தெரிந்து கொண்டது உங்களை வம்புக்கு இழுக்க அல்ல. அன்றைக்கு

இந்த அழைப்பை கொடுத்த தேவன். அவர் சொல்வதைக் கேட்டு, நீதியின்படி நடக்க மனிதனை அழைத்தார். அன்றைக்கு தேவன் சொல்வதை ஜனங்களுக்குச் சொல்ல ஏசாயா தீர்க்கன் இருந்தார். அவர் சொல்படிகேட்டால்போதும். ஆனால், இன்றைக்கு **வல்லமை நிறைந்த வேத வாக்கியங்கள் பூரணமான நிலையில் நமக்காக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.** அந்த வார்த்தைகளோடு நாம் வழக்காடக் கடமைப்பட்டுள்ளோம். நாம் நம்மை சத்தியத்தில் நிலை நிறுத்திக் கொள்ள இந்த வழக்காடுதல் அவசியம்.

ஆகவே, கலப்படமற்ற சுத்த சுவிசேஷத்தை நாம் அறிந்து கொள்ளவும், ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும், இயேசுக் கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படவும், நீதியான வாழ்க்கை வாழவும், இந்த வழக்காடுதல் அவசியம். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள இந்த வழக்காடுதல் மிகமிக அவசியம். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஜீவனும், வல்லமையுமுள்ள தேவனுடைய வார்த்தைகளோடு வழக்காடி, அதாவது, வசனங்களின் உபதேசத்துக்கு மாத்திரம் நம்மை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஜீவியம் ஜீவித்து, பரிசுத்த நகரத்துக்குள் பிரவேசிப்போம்!.

தேவனுடைய கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்களோடிருப்பதாக! ஆமென்!.

●

## ஞானியின் தத்துவங்கள்

**காற்று தெற்கே போய் வடக்கேயுஞ் சுற்றி சுழன்று சுழன்று அடித்து தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும்.**

**எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தாலும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.**

**சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிக்கிறது.**

# ஏன் நாங்கள் மனச்சாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை?

J.C. சோட்

மனச்சாட்சி என்கிற வார்த்தை ஒரு மனிதனுடைய இருதயம், மனது மற்றும் ஆத்துமாவோடு சம்மந்தப்பட்டது. இதன் பொருள், ஒருவர் தான் சேகரித்த ஒரு குறிப்பிட்ட அளவு தகவலையும், அறிவையும், வேறொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து, அது சரியா, தவறா என்று தீர்மானிக்கப் பயன்படுத்துவது. இது தான் மனச்சாட்சி. அந்தத் தகவல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் அல்லது பொய்யான அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டதாகவும் இருக்கலாம். அது உண்மையாக இருந்தாலும் சரி, பொய்யாக இருந்தாலும் சரி, ஒருவேளை அது உண்மையென ஏற்றுக்கொள்ளப் பட்டு, பின்பு அது ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தப்படும். மனச்சாட்சியானது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும் என உணர்பவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். மற்றவர்கள், ஓர் நல்மனச்சாட்சியைப் பெற்றிருப்பதைக் குறித்துப் பேசுகிறார்கள். மேலும், அவர்களுக்கு நல் மனச்சாட்சி இருப்பதால் தாங்கள் சரியாக இருப்பதாக உணர்கிறார்கள். இருப்பினும், தான் நல்மனச்சாட்சியைப் பெற்றிருப்பதாக ஒருவர் எண்ணி, தான் சத்தியத்தைப் பெற்றுக் கொண்ட தாக நினைத்துக் கொண்டு வஞ்சிக்கப்பட வாய்ப்புண்டு. அப்படியென்றால், அவருடைய நல்மனச்சாட்சியானது உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல், தவறை அடிப்படையாகக் கொண்டதாகிறது. எனவே, ஒருவர் ஒன்று சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்க, இறுதி அதிகாரமாக இருக்க மனச்சாட்சியை வழிகாட்டியாக அனுமதிக்க முடியாது.

இந்த மனச்சாட்சி மேலும் எப்படி வேலை செய்கிறது என்பதை உதாரணத்துடன் விளக்க, ஒரு சிறு பிள்ளையை நினைத்துக் கொள்ளுங்கள். அந்த குழந்தை திருடுவது தவறு அல்லது தன்னுடையதல்லாத ஒன்றை மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வது தவறு

என பெற்றோர்களால் போதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அந்த குழந்தை தன்னுடைய பெற்றோர்களோடு இருக்கும் நாட்கள் வரை தொடர்ந்து போதிக்கப்படுகிறது. இதுவும், மற்ற நேர்மையுள்ள ஜனங்களின் போதனையும் ஒத்துப் போவதாலும், சட்டமும் இதையே சொல்வதாலும் குழந்தை வளரும் போது இது சரிதான் என்று ஒத்துக் கொள்கிறது. ஆனால், ஒருவேளை அந்தக் குழந்தை தன்னுடைய நண்பனுடைய வீட்டில் ஒன்றைப் பார்த்து, அதை வைத்துக் கொள்ள விரும்பி, தன்னுடைய தல்லாத ஒன்றை வைத்துக் கொள்ளும்படியாக சோதிக்கப்பட்டு அதை எடுத்துவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங் கள். இப்போது அந்தக் குழந்தை தனக்கு போதிக்கப்பட்டவைகளுக்கு விரோதமாக போய்க் கொண்டிருக்கிறது, அந்தக் குழந்தையின் மனச் சாட்சி உருத்தினபடியால், தான் திருடின அந்தப் பொருளை திரும்பிக் கொடுக்க உந்தப்படுகிறான். இதே விதமாக, யாருக்கெல்லாம் ஒன்று தவறாகப் போதிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கும் இக் கருத்து பொருந்துகிறதாகவே இருக்கமுடியும். ஒரு வேளை ஒன்று தவறாக இருந்தாலும் அல்லது பொய்யாக இருந்தாலும் அது உண்மை என போதிக்கப்பட்டு, உண்மை என ஏற்றுக் கொள்ளப்படுமானால் தனக்கு உண்மையென போதிக்கப்பட்டதற்கு விரோதமாக ஒன்று நடக்கும் போது அவருடைய மனச்சாட்சி அவரை உறுத்துகிறதாக இருக்கும்.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்பும் போது, நாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறோமோ அதற்கு ஓர் நல்ல உதாரணம் சவுல்தான். முதலாவதாக சவுல், ஒரு யூதன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் யூதமார்க்கத்தைப் பின்பற்றினவர். அவர் தன்னுடைய மார்க்கத்தைக் குறித்து பக்தி வைராக்கியமுள்ளவரா யிருந்தார். அந்த மார்க்கத்திற்கு கிறிஸ்தவம் எதிரியாக இருந்தது என அவர் நினைத்தார். அதன் விளைவாக, கிறிஸ்தவர்களை துன்பப் படுத்தும்படி புறப்பட்டுச் சென்றார். அவரைப் பற்றி நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். " சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் " (அப்போஸ்தலர் 8:3) தொடர்ந்து, நாம் இப்படி வாசிக்கிறோம். " சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர் களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள

ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களை கேட்டு வாங்கினான் ” (அப்போஸ்தலர் 9:12).

இச்சம்பவத்தை நாம் தொடர்ந்து வாசிக்கையில் சவுலும், அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்கு சென்று கொண்டிருக் கும் போது கர்த்தர் அங்கே தரிசனமானார், “அப்போது சவுல் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீஎன்னை ஏன் துன்பப்படுத் துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்; ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர் நீதுன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீஎழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீசெய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் ” (அப்போஸ்தலர் 9:4-6). சொல்லப்பட்டி ருக்கும் காரியங்களை நாம் தொடர்ந்து படிக்கும்போது, அனனியா என் னும் பேர்கொண்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் சவுலினிடத்தில் வந்து, “ நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு ” என்றான் (அப்போஸ்தலர் 22:16). இப்போது பவுல் என்ன செய்தார்? கிறிஸ்து வில் விசுவாசியாகி தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை ஆண்டவரென்று ஒத்துக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றான். இதைச் செய்து விட்டு, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஜெப ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப்போஸ்தலர் 9:20)

இப்போது இந்த மனுஷனைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். இவர் உண்மையுள்ள மற்றும் யூத மார்க்கத்தில் பக்திவைராக்கியம் உள்ள ஒருவராகக் காணப்பட்டார். இவர் ஆண்களையும், பெண் களையும் துன்பப்படுத்தும் அளவுக்கு கிறிஸ்தவத்திற்கு எதிரானவராக இருந்தார். ஆனால், திடீரென இயேசுவை விசுவாசிக்கிறவராகி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். அது மட்டுமல்ல, அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் கர்த்தருக்கு சேவை செய்வதிலும், கர்த்தருடைய காரியத்தை உலகெங்கிலும் பரப்புவதிலும் செலவிட்டார்.

ஆனால், அவர் கிறிஸ்தவனாவதற்கு முன்பு உருண்டோடிய அந்த வருடங்கள் எப்படி? தான் செய்தவைகளில் அவர் உண்மை

யாகவும், நேர்மையாகவும் இருந்தாரா? அவைகள் எல்லாவற்றையும் தான் ஏன் செய்தேன் என்பதற்கு அவரே கூறுவதைக் கேளுங்கள். "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத் திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டு மென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர் களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச் சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படு கையில் நானும் சம்மதித்திருந்தேன், சகல ஜெப ஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன் ; அவர்கள் பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்" (அப் போஸ்தலர் 26:9-11).

இவைகளெல்லாம், சவுல் சபையை துன்பப்படுத்திய நாட்களில் நல்மனச் சாட்சியோடு தான் அவைகளைச் செய்திருக்கிறார் என்றே சொல்கின்றது. அவர் தான் செய்தவைகளில் உண்மையாவும், நேர்மை யாகவும் இருந்திருக்கிறார். அவர், தான் செய்தவைகளைப் பற்றி நன்றா கவே உணர்ந்திருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், உண்மை என்னவென்றால், அவருடைய மனச் சாட்சி, இவர் தேவன் என்ன செய்ய விரும்பினாரோ அதன்படி செயல்படாமல் அவர் எதைச் சரி என தன் மனதில் எண்ணினாரோ அதனடிப் படையில் செயல் பட்டது. ஆனால், இவர் சத்தியத்தைக் கற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்த பிறகே இவர் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

என் நண்பர்களே, தேவன் நல்மனசாட்சியை மட்டும் ஒரு வரிடம் எதிர்பார்த்தால், அதன் பொருட்டு எல்லா மதங்களிலுமுள்ள ஜனங்களும் நல்மனச்சாட்சி உடையவர்களாயிருந்தால் அவர்களும் இரட்சிக்கப்பட முடியும் என்றாகிவிடும். அப்படியென்றால், எல்லா சபைகளின் எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஜனங்கள் தேவனை விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்படும். மேலும், ஒருவர் கிறிஸ்த வனாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒருவர் தேவ னிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டா லும் சரி எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்பட்டு விடும். எல்லா ஜனங்களுக்கும் தங்கள் எண்ணங்கள் செயல்பாடுகள், மதங்கள் போன்றவைகளை கடைசியாக நியாயப்படுத்தும் மனப்பான்

மை உண்டு. அவர்கள் மனசாட்சியில் சூடுண்டவர்களைப் போலாகலாம் அல்லது தங்களுடைய மனச்சாட்சி அவர்களை உறுத்தும் வரை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகப் போகலாம் (I தீமோத்தேயு 4:1-5). இது இறுதியில் நல்மனச்சாட்சியைக் கொண்டு வரும்.

அப்படியானால், நல்மனச்சாட்சி மட்டுமே இதற்குப் பதில் அல்ல. வெறுமனே நல்மனச்சாட்சி ஒருவருடைய இரட்சிப்புக்கு எந்த உத்திரவாதமும் கொடுக்காது. ஒருவர் தன்னுடைய மனச் சாட்சி தேவனுடைய சித்தத்தின் அறிவை ஆதாரமாகப் பெற்றிருக்கும் போது தான், அது சரியாக இருப்பதாக நம்ப முடியும். அப்போது ஒருவருடைய எண்ணங்கள், செயல்பாடுகள், ஏன், அவர்கள் வாழ்க்கை யே தேவனுடைய வார்த்தையால் ஆளுகை செய்யப்படும். மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப்படும்போது மட்டுமே அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதை விசுவாசிக்கும் போது தான், அவர் தேவனுடைய போதனைக்கு விரோதமாகச் செல்லும்போது அல்லது தேவனுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு வாழாத போது ஒருவருடைய மனச்சாட்சி குத்தும். அப்போது தான் அவருடைய மனச்சாட்சி உயிருள்ளதாகவும், சிறந்ததாகவும் இருக்க முடியும்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டது. இது உண்மையானதாயும், சரியானதாயும் இருக்கிறது. தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமத்தின்படி நாம் வாழ்ந்தால் தான் நாம் சரியாக இருக்கிறோம் என்று பொருள். ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கும் போது, அதாவது, ஆவியின் வார்த்தைகள் நாம் கர்த்தருடைய போதனை களை அனுசரித்திருக்கிறோம் என்று ஒத்துக் கொள்ளும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்வோம்.

“ நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார் ” (ரோமர் 8:16). மாறாக, ஆவியின் வார்த்தை ஒரு காரியத்தைச் சொல்லி அல்லது தேவனுடைய வார்த்தை குறிப்பிட்ட காரியங்களைப் போதித்து, நாம் அதற்குக் கீழ்ப்படியத்தவறினால் அல்லது கர்த்தருடைய எதிர்பார்ப்புக்கேற்ப நாம் வாழவில்லையென்றால், ஆவியானவர் தம்முடைய வார்த்தை மூலமாக நாம் கர்த்தருடைய பிள்ளைகளல்ல என்று அறிவிக்கிறார் அல்லது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்

கிறபடி அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறோம் என்று பொருள்.

அதன் பொருள், நல்ல உணர்வுகளை, நல் மனச்சாட்சியைப் பெற்றிருப்பது மாத்திரம் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சி அல்ல. தேவன் தம்முடைய வார்த்தையில் விவரித்திருக்கிற வழி அல் லாமல் வேறு வழியில் இரட்சிக்கப்பட முடியும் என நினைத்து ஏமாந்து விட வேண்டாம். நிச்சயமாகவே, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்கு நாம் கீழ்ப்படியத் தவறினால், நம்முடைய மனச் சாட்சி உயிருள்ளதாக இருந்தால், தேவன் சொன்னவைகள் நமக்கு முக்கியமானதாக இருந்தால், நம் மனச்சாட்சி நம்மைக் குத்தும், அது அப்படிச் செய்ய வேண்டும். இது, நாம் தேவனோடு காரியங்களை சரிச் செய்ய வேண்டும் என்று நல்ல நினைப்பூட்டுதலாக இருக்கும். நாம் அதைச் செய்யும் போது, நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்திருக்கிறோம் என நாம் அறிவோம். இது நல்ல உணர்வுகளை, நல்மனச்சாட்சியை உண்டாக்குகிறது; இதனடிப்படையில் மட்டுமே, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அவருக்குக் கீழ்ப்படிந்தி ருக்கிறோம் என்று அறிகிறோம். இக்காரியத்தில் மட்டுமே நமக்கு நல்மனச் சாட்சி இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் சந்தோஷமுள் ளவர்களாக இருக்க முடியும்.

உங்களுக்கு நல்மனச்சாட்சி இருக்கிறதா? உங்களுக்கு தேவ னுடைய சித்தம் என்னவென்று தெரியுமா? அவருடைய சித்தத் திற்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையானால் உங்கள் மனச் சாட்சி உங்களைக்குத்த வேண்டும்; நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வரை அது தொடர்ந்து உங்களைக்குத்த வேண்டும். நீங்கள் கிறிஸ்து வை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ் துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய பிள்ளையாக்கி, அவருடைய குடும்பமாகிய சபையில் அங்கத்தினராக்குவார் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; கலாத்தியர் 3:26, 27; அப்போஸ்தலர் 2:47). இதை நீங்கள் செய்தால் உங்களால் நல் மனச்சாட்சியைப் பெற்றுக் கொள்ளமுடியும். அப்படிப் பெற்றுக் கொள்ளும் போது உங்களுக்காக கர்த்தருடைய சித்தம் இது தான் என்றும், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்கள் என்றும், அவர் உங்களை இரட்சித்திருக்கிறார் என்றும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

●

பெண்கள் பகுதி

# ஆண்கள் தலைமைக்கும் பெண்கள் அவர்கள் துணைக்கும்

சகோ. ரேச்சல் நாயகம்

ஓர் ஆண்பிள்ளைக்கு, அவனுடைய இளம்பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும் போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள் ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு, அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றி, தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்குமிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலகத்திற்கும் இடையே நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பது பற்றி, குடும்பம் எடுக்கும் முடிவுகளுக்கு தேவனுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் போதிக்க வேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளைகளின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்தி ருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கை துணைவருடன் பிரச்சினையை சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்து கொண்ட (அல்லது தான் தெரிந்து கொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனை தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்பார்க் கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்கு சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளை சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதை தரமான கல்வி அறிவுடன் வளர்க்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, எளிமையான இல்லத்தரசியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருப்பதில் ஆர்வமின்மையால், பெண்கள் இக்காரியத்தைக் குறித்து பெரிதாக கவலைப்படுகிறார்கள். இது ஒரு சோகமான, ஆர்வம் காட்ட முடியாத வேலை என்ற கருத்து

நிலவுவதினால் அநேகத் தாய்மார்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பிலிருந்து தப்பித்துக் கொண்டு அலுவலகங்களில் வேலை பார்க்கும் உற்சாகத்தை அடைய கொஞ்சமும் தாமதிப்பதில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்கள் அதிகமாய் கற்றுக் கொடுக்கப்பட்டவை - நமது கலாச்சாரம், ஒன்றுக்கும் உதாவாதவர்களும், அடக்கப்பட்டவர்களும் தான் வீட்டிலிருப்பார்கள் என்றும், தாலந்துள்ளவர்கள், உலகத்தில் போட்டிப் போட்டுக்கொண்டு தங்களுக்கென்று நல்லதொரு எதிர் காலத்தை உண்டாக்கி, அதிகமாய் சம்பாதிப்பார்கள் என்றும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுக்கிறது. கடந்த தலைமுறையில் தாய்மத்துவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் திறமைகளை குடும்பத்திற்காக பயன்படுத்துவதை கௌரவமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அதிலேயும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

## I. அவர்கள் என்ன கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாக கற்றுக்கொள்ள முடியும்?

**வாயின் வார்த்தைகளினால்:-** அன்றாடம், பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகள் வெற்றியுள்ள வாலிபர்களாக வருவதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்கள் கற்றுக்கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.

**வாழ்க்கையினால் :-** நாம் வார்த்தைகளைத் தொடர்ந்து பேசாமல் இப்பொன்றும் பிறகொன்றுமாக பேசுகிறோம். ஆனால், நாம் ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தானாகவே, நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைக் கேட்கிறார்களோ அதை விட நம்மிடமிருந்து எதைப் பார்க்கிறார்களோ அதையே பலமடங்கு அதிகமாக கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இதுதான் உண்யையான மனோநிலை. ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்து கொண்டு, அவனுடைய தலைமைத்துவத்தை சவால் விட்டுக் கொண்டு இருக்கும் போது, தன்னுடைய பெண் பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்

படிந்து அவர்களை மதிக்கச் சொல்லி கற்றுக்கொடுக்கும் போது அவள் முழு வெற்றியையும் அடைந்து விட முடியாது. அதைப் போலவே, தன் மனைவியை அற்பமாய் எண்ணுகிற ஒரு கணவன் அல்லது திடசித்தமில்லாமல் பெண்களால் ஆளப்படும் ஒரு கணவன் தன் ஆண் மக்கள் அவர்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்வது போல அன்பு கூரவேண்டுமென்று கற்றுத்தர முடியாது. அத்தோடு தன் மகன்களை ஒரு பொறுப்புள்ள, தலைமையேற்று நடத்தக் கூடிய பண்புள்ளவர்களாக உருவாக்க முடியாது. சந்தேகத்திற்கிடமின்றி, நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியதான அணுகு முறைகளை நம்மைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகையால், நாம் கற்றுக்கொடுக்ககூடிய விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## II. அதிகாரம், உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம்? தலைமையேற்று நடத்துவது, கீழ்ப்படிந்து போவது என்பதெல்லாம் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று. மற்றபடி இதில் ஏதும் விசேஷம் இல்லையென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாய் சுய நலமாயும் ஆண்களால் நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது. இன்றைய நாட்களில் அநேக குழந்தைகள் எந்த விதமான அதிகாரங்களையும் மதிப்பதில்லை. தங்களை கண்டிக்கிறவர்களிடம் ஒருவிதமாக ஆத்திரத்துடனும், கீழ்ப்படிய மனமில்லாமலும்கூடிய முகத்தை வைத்துக்கொண்டும் உள்ளனர். உதாரணமாக பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள் அரசாங்கம் போன்றோரிடம் இவ்வாறு நடந்து வருகிறார்கள்.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்தான் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும் போது, அந்த தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறர். ஆணுக்குத் துணையாக பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும் போது மீண்டும் சிருஷ்டிகர் என்ற

அதே அதிகாரத்தில் தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம் அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்கு முறை மீது சவால் விட்டு வெற்றி பெற்றுவிட முடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும் போது, குற்றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டா வெறுப்பாக வாழ வேண்டிவரும். தேவன் தன்னுடைய அதிகாரத்தால் சொன்ன கட்டளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்குக் காரணம். தங்கள் கணவன்மார்களின் தலைமைத்து வத்தை ஏற்காத பெண்களுக்கும் இதே நிலை தான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாக காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது அவசியம். நான் உனக்கு சொல்கிறேன் நீ இதை செய் என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக்கூடாது. அதே, நேரத்தில், தாங்கள் பெற்றோராய் இருப்பதால், பிள்ளைகளுக்காக தேவனுக்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும். இப்படிச் செய்வது அவர்களிடையேயுள்ள பெற்றோருக்கு விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப்படுத்துதல் ஆகிய தன்மைகளை களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

**“பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக”** (எபே. 6:1-4). **“பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது”** (கொலோ. 3:20).

பிள்ளையானவன் தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்தின் கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்கு

கீழ்ப்படிதல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல், இப்படியே ஆயிரக் கணக்கான ஒவ்வொரு காரியங்களுக்கும், பெற்றோர் தங்கள் பிள்ளை களிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத் திற்கு கீழ்ப்படிய வேண்டுமோ அதே போல் பிள்ளைகளும் பெற்றோ ருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்ய வேண்டும்.

மனித உறவு என்ற சொத்துக்களை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப் புடனும் செய்யப்படக் கூடிய வேலையாகும். குடும்பத் தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் பங்குண்டு. ஆனால், மனைவி யானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளை போஷிக்கும் தனி சிலாக்கியம் பெற்றிருப்பதால், அவள் கணவனைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தர முடியம். இவைகள் நாம் பிடித்துக் கொள்ளும்படியாக நம் வாழ்க்கையில் கிடைத்த தேவ சித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள்.

## உபத்திரவத்தில் மேன்மை

***உபத்திரவம் பொறுமையையும்,***
***பொறுமை பரீட்சையையும்,***
***பரீட்சை நம்பிக்கையையும்,***
***உண்டாக்குகிறதென்று***
***நாங்கள் அறிந்து,***
***உபத்திரவங்களிலேயும்***
***மேன்மை பாராட்டுகிறோம்.***

வாலிபர் பகுதி

# சோம்பேறியே!

K. சேகர்

**வி**ழித்திருந்து விசுவாசத்தில் விண்ணோக்கும் வாலிபர்களுக்கும்! இளைஞர்களுக்கும்! இயேசுவின் நாமத்தில் இதயம் கனிந்த நல்வாழ்த்தகள்! வாலிபர்களே! தாலாட்டுப்பாடி நம்மை உறங்க வைக்கும் சோம்பல் இரவு பகல் அறியாது. முடங்க வைக்கும் சோம்பல் சூரியோதயத்தை கண்ணுக்குக் காட்டாது. இப்படி நித்திரைப் பிரியராய் தூக்க மயக்கமாய் புலம்புகிற சோம்பேறிகளின் இருதயத்தில் சுருக்கென்ற படுவதற்கு நறுக்கென்று நாலு வாக்கியங்கள் வேதத்தில் சொல்லப்படுகிறது. ஆம், **சோம்பேறியே நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய். எப்பொழுது தூக்கத்ததை விட்டு எழுந்திருப்பாய். இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கி நித்திரை செய்யட்டும் என்பாயோ?** என்று. மேலும் இந்த சமுதாயமும் பல பட்டப்பேர்களை சூட்டி அவர்களுக்குச் செல்லப் பெயர்களாகச் சொல்லப்போனால் அவர்களுக்குச் செல்லப் பெயர்களாகச் சொல்லப்போனால் வாழபழச் சோம்பேறி, சுடுசோம் பேறி, தூங்குமூஞ்சி, தின்னைதூங்கி, சாப்பாட்டு ராமன் போன்ற பல பெயர் களை கொண்டு அவர்களை சிறப்பிக்கச் செய்கிறது. விழித்திருந்து சிந்திப்போம்.

**சோம்பலும் - சாம்பலும்**

ஒரு விதத்தில் சோம்பலும் சாம்பலும் ஒரே விதமான அறிகுறிகளைக் கொண்டதாகவும், தன்மையுடையதாகவும் காணப்படும். பாருங்கள் சாம்பல் அழிந்தற்கான அடையாளம் , சோம்பல் அழிவுக்கான அடையாளம். சாம்பல் -துக்கத்தின் அடையாளம். சோம்பல் துக்கம் வருவதின் அடையாளம். எப்படிப் பார்த்தாலும் இவ்விரண்டும் நல்ல முடிவைக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் இவ்விதமாய் இவைகளை ஒப்பிட முடியும். ஆம் சாம்பல் என்பது விபத்தில் ஏற்படும் மரணத்துக்கும், சோம்பல் என்பது

தற்கொலைக்கு ஒப்பிடலாம். இரண்டும் நல்ல முடிவை அடைவதில்லை. சோம்பலுக்கு நாம் இடம் கொடுத்தால் சோம்பல் நம்மை சாம்பலாக்கிவிடும். வாலிபர்களை ஜக்கிரதையுடன் சிந்திப்போம்.

## சோம்பேறி ஒரு வம்பேறி:

காரிய சித்தியறியாத ஒரு சோம்பேறி ஒரு வம்பேறி. சோம்பேறி வாக்குவாதம் செய்வதும் வம்பலப்பதுமே விரும்பிச் செய்கின்றான். சோம்பேறி இலந்த முள்ளுக்குச் சமமானவன். அவர்களிடத்தில் வாய் கொடுத்துச் சிக்கிக் கொண்டால் அவனுடைய பிடியில் இருந்து தப்பிப்பது மிகவும் கடினம். அவர்களுடைய வம்பேறித்தனம் மிகவும் அபாயகரமானது. அவர்களுடைய வம்பேறித்தனம் முரட்டுத்தனமானது. பின் விளைவுகளைப் பற்றியோ, நஷ்டங்களைப் பற்றியோ கவலையறியாது. வார்த்தையில் வெளிப்படும் வெறித் தனம் நட்பின் தன்மையறியாது. உறவுகளின் பாசம் புரியாது. ஆம், வார்த்தையில் ஒரு மென்மை இருக்காது. செயல்களில் அன்பு இருக்காது. கடித்துக் குதறும் மிருகங்களைப் போலத்தான் அவனுடைய வார்த்தைகளும் செயல்களும் இருக்கும். அவர்கள் யாரோடும் இணங்கி வாழ விரும்பமாட்டார்கள். அன்பு செலுத்தும் இதயங்களைப் புரிந்து வாழ மாட்டார்கள். குடி, வெறி, காமம், களியாட்டு போன்றவைகள் தான் இவர்களுடைய செயல்பாடுகள். வக்கிரம், உக்கிரம், வன்மம் பொறாமைகள் தான் இவர்களுடைய சிந்தனைகள். அவர்கள் தேடுகிற காரியம் விரும்புகின்றஇடம் எல்லாம் நாம் விரும்பத்தகாததாகத்தான் இருக்கும். தேவபக்திக்குரிய சிந்தனைகள் அறிவோடும் உணர்வோடும் இருக்க வாய்ப்பில்லை அப்புறம் என்ன? அடுத்தவேளை சாப்பாட்டுக்கு வழி என்ன? எதைப் பற்றியும் சிந்திக்க மாட்டார்கள்? வாலிபர்களே இன்று அநேகருடைய நிலை என்ன ? சிலர் இன்று வரை நிலையறிந்து அலைகிறவர்களாயிருக்கிறோம். போக்கிடம் இல்லாமல் தவிக்கிறோம். வாலிபர்களே மாற்றத்தை நோக்கி சிந்தியுங்கள்.

## சோம்பேறி ஒரு கொம்பேறி:

நான் புடிச்ச முயலுக்கு மூன்று கால் என்பார்கள். இது முழுக்க முழுக்க சோம்பேறிகளுக்குத் தான் பொருந்தும். இவர்கள் தங்களை ஞானிகளென்று அழுத்தம் திருத்தமாக நம்புகிறார்கள். புத்தியுள்ள மறுஉத்தரவு சொல்லத் தரும் ஏழு பேரைப் பாாகிலும் சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன்.(நீதி: 26; 16) ஒரு சோம்பேறி

புத்திமானாகவோ, ஞானவானாகவோ இருக்க முடியாது. ஏனெனில், ஞானி சொல்லுகிறார் : சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சைத் தோட்டத்தையும் கடந்து போனேன். இதோ அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது. நிலத்தின் முகத்தை காஞ்சொறி மூடினது. அதின் சுவர் இடிந்து கிடந்தது. என்றும் சோம்பேறி இதைக் கண்டும் அதை நோக்கியும் சிந்தனை செய்யவில்லை. உள்ளத்தில் புத்தி அடையவில்லை(நீதி: 24:3032) ஆனாலும் சோம்பேறி தன் பார்வைக்கு இதிக ஞானியாகவும், புத்திமானாகவும் காட்சி அளிக்கிறான். சோம்பேறியினிடத்தில் ஏதோ ஒரு காரியத்தைச் செய்யச் சொல்லி அதில் குறை இருந்தால் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்றோ- இது இப்படி இல்லை அப்படி என்றோ சொல்லி சம்மதிக்க வைக்க முடியாது. ஏன் இதில் என்ன தப்பு, ஏன் இப்படிச் செய்தால் என்ன, என்றும் இல்லை இல்லை இதுதான் சரி என்றும் சொல்லி ஒரே பிடியாக நிற்பார்கள். அவர்கள் தங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதையோ திருத்தச் சொல்வதையோ... விரும்பு வதில்லை. ஆனாலும் சோம்பேறி தன் பார்வைக்கும் ஞானி. ஆனாலும் (சோம்பேறி) அவன் தான் முறுங்கை மரத்தில் ஏறி ஒற்றைக் கொம்பில் நிற்கிறான் என்பதை அறியான். இளைஞர்களே, வாலிபர்களே இறங்கி வந்து சிந்தியுங்கள்!

## ஏற்றம் தரும் எறும்பின் வழி:

வாலிபர்களே! சோம்பல் தூங்கி விழப்பண்ணும் வேலை செய்ய சம்மதிக்காது. இதே நிலை நீடிக்குமானால் நாம் ஏழையாவதும் தரித்திரராவதும் உறுதி. சோம்பேறியின் ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது. சோம்பேறியின் ஆசை அவனைக் கொல்லும்.(நீதி: 21:25) ஆகவே, எறும்பினிடத்தில் நாம் சென்று அதின் வழிகளைக் கண்டு நம் வாழ்வை பாதுகாப்புள்ளதாக வளமுள்ளதாக மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எறும்பு எதைக் கண்டு அஞ்சுகிறது யாரைப் பார்த்து பயப்படுகிறது. அதின் கடமைகளில் சரியாக இயங்குகிறது. சரியான காலத்தில் இயங்குகிறது. மழையைக் கண்டு ஐயோ நான் என்ன செய்வேனென்று கலங்குவதில்லை காற்றைக் கண்டு வெயிலைக் கண்டு இனி எங்கே போவேன் என்று புலம்புவதில்லை. அது இரவு பகல் என்று பார்க்காது தொடர்ந்து ஓடி உழைத்து தானியத்தை களஞ்சியத்தில் சேர்த்து இல்லாமை வறுமை என்ற இருளைக் காணாமல் வெளிச்சத்தில் நிம்மதியாய் வாழ்வதைப் போன்று நாமும் வாழ தேவன் அருள் செய்வாராக!

சிறுவர் பகுதி

# செவி கொடுக்கும் தேவன்

Dr. ஏபில் நாயகம்

கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரிய தம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் ஒவ்வொருவரும் அரை யாண்டு தேர்வுக்காக நம்மை இந்நாட்களில் ஆயுத்தமாக்கிக் கொண்டிருப்போம் என நம்புகிறேன். ஆகவே, உங்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் பொருட்டு இக்கட்டுரையை எழுதியிருக்கிறேன். என்னோடு சேர்ந்து, தயவுசெய்து கவனமாகப் படியுங்கள்.

மெத்தையில் விழுந்த ஏஞ்சலின் ஒரு பெருமூச்சு விட்டாள். அறைக்குள் வந்த அவள் அம்மா, பள்ளியில் இன்று உனது நாள் நன்றாக அமையவில்லையா என்ற அரவணைப்போடு கேட்டாள். நன்றாக அமையவில்லை என்று சொல்லாதீர்கள். மிகவும் மோசமாக இருந்தது, எனக்கு அங்கு போகவே எனக்கு பிடிக்கவில்லை என்று ஏஞ்சலின் வெறுப்புடன் கூறினாள். அதைக் கேட்ட அம்மா, பள்ளியில் அப்படி என்னதான் நடந்தது? என்று சொல்லேன் என்றாள்.

சரி, அப்படி ஒன்றும் பெரிதாக நடந்துவிடவில்லை என்பது ஏஞ்சலின் விளக்கம். என் புதுப்பள்ளியில் ஒருவரையும் எனக்குத் தெரியவில்லை. அது தான் பிரச்சனை. நான் சேர்ந்துள்ள பள்ளியில் சென்ற வருடமே அநேகர் படித்திருப்பதால், ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கோ புதுநண்பர்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினமாயுள்ளது.

நீ என்ன சொல்ல வருகிறாய் என்று நன்றாக புரிகிறது. நானும் உன் தந்தையும் இதைக் குறித்து பேசினோம். போகப் போக உனக்கு இது பழகிவிடும் என்றாள்.

என்ன செய்வதென்றே எனக்கு புரியவில்லை என்று கூறினாள் ஏஞ்சலின். கவலைப்

படாதே ஏஞ்சலின், நம் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும்படியாகவே பரலோகத்தின் தேவன் வேதாகமத்தை நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். நேற்றிரவு நான் ஏசாயாவின் தீர்க்கதரிசன புத்தகத்தை படித்தேன். அதில் யூதர்கள் அடிமைகளாக, அவர்களுக்குப் பழக்கமில்லாத பாபிலோன் தேசத்திற்கு போனார்கள். அங்கு அவர்கள் தனிமையில் வாடுவதாக எண்ணினார்கள். தேவன் அவர்களுக்கு செவி கொடுக்கவில்லை என்றும் நினைத்தார்கள்.

இப்போது தனிமை என்ன என்பதை நானும் உணர்கிறேன் என்று ஏஞ்சலின் கூறினாள். ஆனால் அம்மாவோ, ஏசாயா தீர்க்கன் சொல்வதை தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள். தேவன் எப்படிப் பட்டவர் என்று ஏசாயா யூதர்களுக்கு விளக்குகிறார். நமது தேவன் விக்கிரகங்களைப் போல செவி கொடாத தேவன் அல்ல. அவர் நமது ஜெபத்திற்கு பலன் கொடுப்பதில் சோர்ந்து போகிறவரும் அல்ல. (ஏசா 40:27,31).

என் அன்பு மகள் ஏஞ்சலினே, தேவனிடத்தில் உன் பிரச்சினைகளைச் சொல்லி ஜெபி என்று கூறினார்கள். அத்தோடு, அதை நீ செய்வாயானால் உன் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார் என்றும் கூறினாள்.

ஏஞ்சலினின் முதுகை அன்போடு தட்டிக் கொடுத்துவிட்டு அடுப்படிக்குள் சென்றாள். அம்மா சென்ற பின் ஏஞ்சலின் முழங்காலிட்டு தேவனை நோக்கி, தேவனே, பள்ளியில் நான் தனிமையில் தவிக்கிறேனே! எனக்கு இரங்கும்! என் பிரச்சினையை நீக்கும் என்று இயேசுவின் மூலம் கெஞ்சி ஜெபித்தாள். அவள் ஜெபித்த பின்பு மிகவும் நன்றாக இருப்பதாக உணர்ந்தாள். புன்னகை அவள் முகத்தில் மலர்ந்தது. தேவன் அவள் ஜெபத்திற்கு செவி கொடுத்ததாகவே எண்ணினாள்.

நாமும் நம்முடைய பிரச்சினைகளை தேவனுக்குத் தெரியப்படுத்துவோம். தேவன் நமது ஜெபத்திற்கு நிச்சயம் செவி கொடுப்பார். பரத்திலிருந்து சிறு பிள்ளைகளாகிய நமக்கு ஞானம் தருவார். அப்பொழுது நம்முடைய தேர்வை நாம் பயமில்லாமல் சந்திக்க முடியும். வெற்றியும் கிடைக்கும். எதிர்காலம் ஆசீர்வாதமாக அமையும். ஆமென்.

# ஏன் சபை கூடுகிறோம்?

Bro. பாண்டியன்

இந்த உலக மக்கள் வருடத்தில் சில நாட்கள் கடவுளை வணங்கி மகிழும் போது கிறிஸ்தவர் மட்டும் வாரந்தோறும் கூடி தேவனை வணங்குவதேன்? இதைக்குறித்து வேதத்தில் ஆராய்ந்து பார்க்கும் போது எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்தி ருந்தபடியால் அதை ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் என்று வாசிக்கி றோம். பிற்பாடு மோசேயின் காலத்தில் அந்த நாளில் மனிதனும் ஓய்ந் திருக்க கட்டளைக் கொடுத்தார் நமக்குத் தெரிந்து மனிதனை ரெஸ்ட் எடுக்க கற்றுத் தந்த ஒரே தெய்வம் நம் தேவன் தான். இன் றைக்கு மருத்துவரிடம் செல்லும் அநேக நோயாளிகளுக்கு சரியான ஓய்வு பற்றியும் ஆலோசனை வழங்குவதைப் பார்க்கிறோம். ஆறுநாள் வேலை; ஒரு நாள் ஓய்வு என்பது தேவதிட்டமாக இருக்கிறது. அதே போல் பகல் நேர வேலையைத் தான் தேவன் ஆலோசனையாக வைத் தார்- இரவில் மிருக ஜீவன்கள் தங்கள் இரையைத் தேடும் என்கிறது வேதவசனம். ஆனால், இன்றைய நாட்களில் எல்லாம் தலைக்கீழாகி மனிதன் உடல் நலம் மட்டுமல்ல மனநலமும் கெட்டு அவதிப்படு கிறான்.

வாரத்தில் ஒருநாள் ஓய்வு என்பது வெறும் சரீர ஓய்வாக இல்லாமல் அந்த நாளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை வேதம் தெளிவாக எடுத்துரைப்பதோடு அது எப்படி இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பொருந்தும் என்பதைத்தான் இக்கட்டுரையில் காணப்போகிறோம். உபாகமம் 4:9,10 வசனங்களில் இதைக்குறித்த சில ஆலோசனைகளைப் பார்க்கிறோம். முதலில் “ ஜனங்களைக் கூடி வரச்செய்து என்வார்த்தைகளை அவர்கள் கேட்கப்பண்ணுவேன் ” என்று தேவன் சொல்கிறார். இதிலிருந்து நாம் அறிய வேண்டியது என்னவெனில் நாம் சபை கூடிவரச்செய்வது தேவனுடைய செயல் தான். சினிமாக்கொட்டகை, அரசியல் கூட்டங்கள், திருவிழாக்கள், பள்ளிக்கூடம், தொழிற்சாலைகள், கடற்கரை, கடைவீதி இப்படி பல இடங்களில் காணப்படும் மக்கள் கூட்டம் மனித முயற்சியினால்

இருக்கிறது. ஆனால் வாரத்தின் முதல் நாளில் கூடிவரும் கிறிஸ்துவின் சபையானது உலக தோற்றத்திற்கு முன்பாகவே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் கூட்டமாக இருக்கிறது. இவர்கள் உலகத்தின் பார்வையில் சாதாரணமாகத் தெரிந்தாலும், எல்லாவற்றை யும் சிருஷ்டித்த தேவனுக்குச் சொந்தமானவர்கள். எனவே தான், தேவன் இவர்களைக் கூடிவரச் செய்கிறார். இஸ்ரவேல் ஜனங்களைத் தெரிந்து கொண்டதற்கு காரணம், ஒன்று தேவனின் அன்பு, மற்றொன்று அவர் இட்ட ஆணை - ( உபா 7:7,8, ஆதி 22:18 ).

சபை கூடுதலுக்கான நாளை நாம் அசட்டை செய்தால் நம்முடைய **தொழில் சிறக்காது.** இஸ்ரவேல் ஜனம் ஆறுநாள் மன்னா சேகரிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், சிலர் ஏழாம் நாளிலும் புறப்பட்டு சென்ற போது அதைக் காணவில்லை. அதற்கு தேவன், " என் கட்டளைகளைக் கைக்கொள்ள எந்த மட்டும் மனதில் லாதிருப்பீர்கள்? " என்று கோபித்துக் கொண்டார். ஓய்வு நாளில் விறகு பொறுக்கின ஒரு மனுஷன் கல் எறிந்துக் கொல்லப்பட்டான். இது தேவனுடைய கண்டிப்பையும், நாம் அந்த நாளுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. நெகேமியாவின் காலத்தில் வித விதமான தொழில் செய்வோர் அனைவரையும் குறிப்பிட்டு ஓய்வு நாளில் அதைத் தவிர்க்கும்படி மிகவும் கடிந்து கொண்டதாகப்பார்க்கிறோம் ( நெகே13:15-22 ) அதெல்லாம் நமக்கு மாதிரியாக, உதாரணங்களாக எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. ஆக, நமக்கு ஓய்வு நாள் இப்போதைய வாரத்தின் முதல் நாளுக்கு மாதிரியாக இருப்பதை நினைவு கூர வேண்டும். புதிய உடன்படிக்கையே மேலானதாக இருக்கிறது. இதற்கு நாம் செவி கொடுக்கவில்லையென்றால் இப்போதைய ஆசீர்வாதங்களை இழப் பதோடு வரும் தண்டனைக்கும் தப்பித்துக் கொள்ள முடியாது ( எபி 2:1-3 ) சபை கூடிவரச் செய்கிற தேவன் அவருடைய வார்த்தை களைக் கேட்கப்பண்ணுகிறார் என்று உபாகமத்தில் வாசிக்கிறோம். ஆக, சபைக்கூடிவருதலில் முக்கிய அங்கமாக தேவனுடைய வார்த்தை களைக் கேட்க வேண்டும் என்பதே தேவசித்தமாக இருக்கிறது.

தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பது குறித்து நெகேமியா 8:1-3 ல் ஒரு நல்ல உதாரணத்தைப் பார்க்கிறோம். இங்கே ஜனங்கள் ஒருமனப்பட்டு கூடி வாசிக்கப்பட்ட வசனங்களை கவனமாய் செவி கொடுத்து கேட்டார்கள். இயேசு ஆண்டவரும் இதைப்பற்றிக் குறிப் பிடும் போது நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள் உள்ள

வன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் என்றார். ஆகவே, சபைக் கூடி வரும் போது குழந்தைகள் நம் கவனத்தை சிதறப் பண்ணாத படிக்கு, முடிந்தால் அவர்களுக்கும் ஒரு நோட்டு, பேனாவை வாங்கிக் கொடுத்து நம்மை அவர்கள் தொந்தரவு செய்யாதபடி பழக்க வேண்டும். இல்லையெனில் ஆண்டவரின் கூற்றுப்படி ராஜ்ஜியத்தின் வசனத்தைக்கேட்டும் உணராதிருக்கும்போது சாத்தான் நம் இருதயத்தி லிருந்து வசனத்தை ' ஆகாயத்துப்பட்சிகளை ' போல பறித்துக் கொள் ளுகிறான். தேவ வார்த்தைகளைக் கேட்பதினால் தான் உண்மையான விசுவாசம் வருகிறது. மாறாக, வியாதி குணமாவதாலோ, சிலர் சொல்வதைப் போல் நான் அந்த தெய்வத்தை வேண்டிக்கொண்டபடி நடந்தது அதனால் நம்புகிறேன் போன்ற விசுவாசங்கள் எல்லாம் நிலைக்காது. இன்றைக்கு ஒருவர் ஞானஸ்நானம் பெற்று சபைக்கூடி வருகிறார் என்றால் அது தேவனுடைய வசனத்தினால் தான். அதினால் தான், '' **சத்திய வசனத்தினாலே தேவன் நம்மை ஜெநிப்பித்தார்** '' என்கிறார் யாக்கோபு; அதைத் தொடர்ந்து தான் பேசவும், கோபிக்கவும் அவசரப்படாமல் கேட்பதற்குத்தான் தீவிரமாக இருக்க வேண்டும் என்கிறார்.

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உபாக 4:10 ல் தேவன் செய்த கிரியைகளை மறவாமல் இருக்கும்படி எச்சரிக்கப்பட்டோம். நாம் தேவன் செய்த அற்புத அடையாளங்களையும், செயல்களையும் அடிக்கடி கேட்டுகொண்டேயிருந்தால் நம் ஆத்துமாவை ஜாக்கிரதை யாகக் காத்துக் கொள்ள முடியும். அதன் மூலம் **தேவனுடைய வல்லமையை தியானித்து அவருக்கு பயப்படும் பயம் நம்மில் உருவாகும். இதற்காகத்தான் தேவன் நம்மை சபைக்கூடிவரச் செய்கிறார்.** உதாரணத்திற்கு, இஸ்ரவேலரின் சுமைகளை எகிப்தில் தேவன் அவர்களுக்கு விலக்கின போது அவரே தேவனாகியக் கர்த்தர் என்று அறிந்து கொண்டார்கள். செங்கடல் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது எகிப்தியரும் பார்வோனுடைய ராணுவமும் தேவனுக்கு பயந்தது. வனாந்திரத்தில் சாயங்காலம் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியான போது இஸ்ரவேலர் தேவனின் வல்லமையை புரிந்து கொண்டார்கள். யோசுவாவின் காலத்தில் யோர்தான் பிரிக்கப்பட்டபோது ஜனங்கள் மத்தியில் ஜீவனுள்ள தேவன் இருக்கிறார் என்பதையும், சத்துருக்களையும் தேவன் துரத்திவிடுவார் என்கிற தைரியம் ஜனங்கள் கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்று பயந்து பணிந்து கொண்டதை

கேட்கும் போது நமக்கும் தேவபயமும் விசுவாசமும் தூண்டப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலும் இயேசு ஆண்டவர் செய்த அற்புதங்கள் அவரை பிதாவோடு இணைத்து தேவக் குமாரனாக விசுவாசிக்கத் தூண்டியது. ( யோவா 3:2 )

இப்படியாக தேவன் நம்மை சபையாக கூடிவரச்செய்து அவருடைய வார்த்தைகளைக் கேட்க செய்யும் போது, அந்த வல்லமையுள்ள வார்த்தைகள் நம்மில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது: 1 சாமு 7:16-29 வசனப்பகுதியில் தாவீதுக்கு தேவன் நிலையான வீடு மற்றும் ராஜ்ஜியத்தைக் குறித்து அறிவித்த போது அவன் ஆண்டவர் இயேசுவின் ராஜ்யமாகிய சபையைப் பற்றி புரிந்து கொண்டு. இதை தெரிந்து கொள்ள நான் எம்மாத்திரம் என்றான். ஆம் தேவ வார்த்தை ஒரு மனுஷனில் தாழ்மையை உண்டாக்க வேண்டும். மேலும் தேவனுடைய தயவை, வல்லமையை அவன் உணர்ந்து விண்ணப்பிக்கிறான். சபையாராகிய நாமும் அவனைப் போல் தேவனுடைய வார்த்தைகளை உணர்ந்து விண்ணப்பிக்க வேண்டும். சபையாராகிய நாமும் அவனைப் போல் தேவனுடைய வார்த்தைகளால் உணர்த்தப்பட்டு ஜெபிக்கிறவர்களாக இருக்கவே இவைகள் நமக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதே நேரம் தாவீது பாவம் செய்து நாத்தானால் கடிந்து கொள்ளப்பட்டபோது அவன் ராஜாவாக உயர்ந்த அதிகாரத்தில் இருந்தும் '' நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் '' என ஏற்றுக்கொண்டான். ( 2சாமு 12:13 ) நாமும் வசனங்களைக் கேட்கும் போது இந்த வித மாற்றத்தை அடையவேண்டும். இல்லையெனில் கெட்டுபோவீர்கள் என்று இயேசுகிறிஸ்து லூக் 13:5 ல் குறிப்பிடுகிறார். தேவனுடைய வார்த்தை நாம் பாவம் செய்யாதபடி தடுக்கிறது ( சங் 119:11 ) மாத்திரமல்ல திரு வசனத்தினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்கவே, கிறிஸ்து தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தார். எபேசி 5:26 கிறிஸ்து உலகில் மாம்சத்தில் வந்து வாழ்ந்த காலத்தை போலவே ' இது கடினமான உபதேசம் யார் இதை ஏற்றுக் கொள்வார் என்றும் சொல்வார் உண்டு. ஏழை லாசரு ஐசுவரியவான் உவமையில் இயேசுவானவர் சொன்னபடி ஒருவன் வேதவசனங்களுக்குக் கீழ்ப்படிந்து தன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால் மரித்தோரிலிருந்து, அன்னை தெரேசாவோ, அண்ணாதுரையோ யார் எழுந்து வந்து சொன்னாலும் திருந்தமாட்டார்கள் ( லூக் 16:31 )சிலர் சிலுவைக் கள்ளனைப் போல்; உத்தமராகிய இயேசுவை நோக்காமல் இன்னொரு

பாவியோடு தன்னை ஒப்பிட்டு தேவனுடைய வார்த்தைகளை அசட்டை செய்கிறார்கள் ( லூக் 23:39,40 ) மாறாக, சிலர் தேவனைக் காட்டிலும் மனுஷருக்கு பயப்படுவோரும் உண்டு. ஆதலால் தான், ஆண்டவர் சரீரத்தையும், ஆத்துமாவையும் அழிக்கவல்ல தேவனுக்கே பயப்படுங்கள் என்றார். அந்த தேவாதி தேவனை நம்மை இப்போது சபையாகக் கூடிவரச் செய்து தம்முடைய வார்த்தைகளை நாம் கேட்கும் படி செய்கிறார். அதற்குக் கீழ்ப்படிந்து தேவ ஆசீர்வாதம் பெற்று தேவனை மகிமைப்படுத்துவோமாக. கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ●

# நாளும் நடப்பும்

1. இந்தியா - பிரிட்டன் இடையிலான உறவை பலப்படுத்த பிரதமர் நடவடிக்கை
2. தங்க முதலீட்டுத் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
3. இணைய வழிக் குற்றங்கள் தான் நாட்டின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன.
4. நவம்பர் 26 இல் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர்.
5. மானியமில்லா எரிவாயு உருளையின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது.
6. தமிழகம் முழுவதும் பருவமழை தீவரம் - விவசாயிகள் மகிழ்ச்சி
7. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் மதச்சார்பற்ற மகா கூட்டணி அமோக வெற்றி

# பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

Bro. பாஸ்கர்

கிறிஸ்துவுக்குள் அருமை வாசகர்களே, ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. தொடர்ந்து கட்டுரையைப் படித்து வருவது மிகவும் மகிழ்ச்சி. இந்த மாதம் நமக்குப் கிடைக்கும் பணத்தை எவ்வாறு பயன்படுத்தி வருகிறோம்? அவைகளிலே தேவன் மகிழ்ச்சி அடைவாரா? நம் ஆண்டவர் பணத்தை பயன்படுத்துவது குறித்து என்ன போதித்தார்? என்பதை இம் மாதம் தெரிந்து கொள்வோம். உக்கிராணத்துவம் என்ற உவமை மூலமாக அறிவோம்.

## I. உவமை

பின்னும் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான் அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப் போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கையொப்புவி. நீ உக்கிராணக்காரனாய் இருக்கக் கூடாது என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் நான் என்ன செய்வேன் என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே கொத்துகிறதற்கும் எனக்குப் பெலனில்லை இரக்கவும் வெட்கப்படுகிறேன்; உக்கிராண விசாரிப்பை விட்டு நான் தள்ளப்படும்போது என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்ய வேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவராக வரவழைத்து. முதலாவது வந்தவனை நோக்கி நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான் அவன் நூறுகுடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி நீ உன் சீட்டை வாங்கி உட்கார்ந்து ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான் பின்பு அவன் வேறொருவனை நோக்கி நீ பட்ட கடன் எவ்வளவு என்றான்

அவன் நூறு கலம் கோதுமை என்றான் அப்பொழுது அவன் நீ உன் சீட்டை வாங்கி எண்பது என்று எழுது என்றான். அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு அவனை மெச்சிக் கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கினும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள். அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவன் யார்? ( லூக்கா16:1-12 ).

## II. *உக்கிராணத்துவம் என்றால் என்ன?*

உக்கிராணத்துவம் என்பது பிறர் பொருளை, பணத்தை, சொத்தை, பொக்கிஷத்தை தன்னுடையது போல பாவித்து அந்தப் பொக்கிஷத்தைப் பாதுகாக்க வேண்டும். தேவன் மெய்யான பொக்கிஷமாகிய கிறிஸ்துவின் சரீரமான சபையை, சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த விலையேறப் பெற்ற பொக்கிஷங்களை பாதுகாக்க வேண்டும். அந்த ஆவிக்குரிய பொக்கிஷங்களுக்கு நாம் அனைவரும் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் உக்கிராணக்காரராக இருப்பதாகக் கூறுகின்றார். ( 1 கொரி 4:1 ) இந்த தேவனுடைய பொக்கிஷங்களுக்கு நாம் அனைவரும் உண்மையுள்ள உக்கிராணக்காரராக இருக்க வேண்டும் ( 1 கொரி 4:2 ). ஆனால், இன்று சபையை வியாபார ஸ்தலமாக மாற்றி பணம் சேகரிப்பதை அநேக பிரிவினை கூட்ட சபைகளில் காணலாம் நம் ஆண்டவர் இயேசு தேவாலயத்தில் ஆடு, மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி அனைவரையும் அடித்து துரத்திவிட்டார். என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதீர்கள் என்றார். ( யோ 2:14-17 )

இன்னும் சிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பணத்திற்காக பிரசங்கித்து ஊழியம் செய்வதைக் காணலாம். சுவிசேஷம் பிரசிங்கிப்பதற்கு கொடுக்கப்படும் பணத்தை தங்கள் உல்லாச வாழ்க்கைக்கு அதாவது மதுபானம், களியாட்டம், விபச்சாரம்

இவைகளுக்கு செலவழிப்பதைக் காணலாம். நம் எஜமானாகிய கிறிஸ்து உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்றால் நாம் என்ன செய்வோம்? பணத்தை வாங்குவதற்கும் உல்லாசமாக செலவழிப் பதற்கும் இது காலமல்ல ( 2 இராஜா 5:20 ) ஊழியத்திற்காக கொடுக்கப்படும் பணத்தை வைத்து உண்மையுள்ள உக்கிராணக் காரர்களாக இருப்போம்.


## III. *அநீதியான உக்கிராணத்துவம்*

நம் ஆண்டவர் இயேசு அநீதியுள்ள உக்கிராணத்தைப் பாராட்டினாரா? இல்லவே இல்லை. இந்த உவமை அநீதியான உக்கிராணத்துவத்தைப் புகழ்வது போலக் காணப்படுகிறது ( லூக் 16:8 ) இயேசு இந்த உவமையின் கருத்தைச் சொல்வதைக் கவனி யுங்கள். இவ்விதமாக ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களா யிருக்கிறார்கள் என்றார். அதாவது, ஒளியின் பிள்ளைகளான தேவ பக்தியுள்ள மனிதர்கள் தேவ காரியங்களுக்கு பணத்தை எவ்வாறு செலவழிப்பது என்பதை அறிந்திருப்பதை விட இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளான தேவ பக்தியற்ற மனிதர் தேவ பக்தியற்ற காரியங்களுக்கு பணத்தை செலவழிக்க அதிகம் அறிந்திருக்கிறார்கள் என்பதைக் கூறுகிறார். இந்த அநீதியுள்ள உக்கிராணக்காரன் பணத்தைக் கொண்டு நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டது போல நாம் பணத்தைக் கொண்டு ஆத்துமாக்களை ஆதாயப் படுத்திக் கொள்ள வேண்டும் அநீதியான உலகப் பொருளால் (பணத்தால்) உங்களுக்குச் சிநேகிதரை சம்பாதியுங்கள் என்றார் ( லூக்16:9 )

## IV. *நீதியான உக்கிராணத்துவம்*

இயேசு உவமையில் நீதியான உக்கிராணத்துவத்தைக் கூறி இருப்பதைக் கவனியுங்கள். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களா யிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவன் யார்? ( லூக் 16:10-12 ) அதாவது ஊழியத்திற்காகக் கொடுக்கப் படும் அநீதியான உலகப் பணத்தை வீண் காரியங்களுக்கும், உல்லாச வாழ்க்கைக்கும் செலவழிக்காமல் ஞானமாக ஊழியக் காரியங்களுக்கு செலவழித்தால் பரலோகத்திலே பொக்கிஷம் உண்டாகும். இதுவே நீதியான உக்கிராணத்துவம்.

திருத்தணி சபை சகோதரர்கள்





நூல் வெளியீடு



கருத்தரங்கில் இன்னொரு பகுதி



## In Kakinada, Andhra Lectures Nov. 3-6 - 2015



Bro. Louis Rushmore & Joshua Gootam



Bro. Ricky Gootam & Rajanayagam



Bro. Ricky Gootam & Benny



Bro. Rajanayagam & Translator

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**

Sis. Kabitha Gootam
&
Sis. Rachel Nayagam



சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்



கலந்து கொண்ட ஆண்களில் ஒரு பகுதி



கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதி

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.